## திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**ந.க.எண் : 0614 /அ1/2025, நாள். .02.2025**

......

**பொருள்:** தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருப்பத்தூர் மாவட்டம், கெஜல்நாயக்கன்பட்டி இ.வெ.நா.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு. தே.குபேந்திரன் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை எண்.151/பள்ளிக் கல்வித் துறை நாள்.09.09.2022.
2. சென்னை – 06, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடித எண் :1975/PSD.C2/2023, நாள். 25.08.2023
3. சென்னை-06, தமிழ்நாடு தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க. எண் 56703/அ4/இ1/2024 நாள். 21.09.2023
4. திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.04182/அ1/2023, நாள்.27.09.2023
5. கெஜல்நாயக்கன்பட்டி இ.வெ.நா.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் கடித ந.க.எண். 18/அ1/ 2025, நாள்.14.02.2025.

......

திருப்பத்தூர் மாவட்டம், கெஜல்நாயக்கன்பட்டி இ.வெ.நா.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. தே.குபேந்திரன் என்பவர் பார்வை (2) இன் படி அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக நேரடி நியமன ஆணை வழங்கப்பட்டது.

இளநிலை உதவியாளர் பணியிடத்தில் நேரடி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ள கீழ்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (5) இல் காணும் கடிதத்தின் வாயிலாக கருத்துருக்கள் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது, அதனடிப்படையில் கீழ்கண்ட இளநிலை உதவியாளருக்கு அவரின் பெயருக்கு எதிரே கலம் 5 ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது .

| வ. எண் | பணியாளர் பெயர் , பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | ஊதியமில்லா விடுப்பு எடுத்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு. தே.குபேந்திரன்<br>இளநிலை உதவியாளர்,<br>இ.வெ.நா.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>கெஜல்நாயக்கன்பட்டி<br>திருப்பத்தூர் மாவட்டம் | 29.09.2023 முற்பகல் | இல்லை | 29.09.2023 முற்பகல் |

மேற்படி பணியாளர் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார். அன்னார் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டும் எனவும், இக்காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது

பணிவரன்முறை ஆணை குறித்து சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட பள்ளித்தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது

இணைப்பு - அசல் பணிப்பதிவேடு

19/2/2025

முதன்மைக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர் மாவட்டம்

19/02/25

பெறுநர்

திரு. தே.குபேந்திரன்
இளநிலை உதவியாளர்,
இ.வெ.நா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
கெஜல்நாயக்கன்பட்டி
திருப்பத்தூர். } உரிய வழியாக

நகல்

தலைமை ஆசிரியர்,
இ.வெ.நா.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
கெஜல்நாயக்கன்பட்டி,
திருப்பத்தூர் மாவட்டம்